எஸ்.நாகேந்திரன்



# லண்டன் லூசியம் சிவன் கோயில் கீர்த்தனைகள்

# இலண்டன் ஹரசியம் சிவன்கோவில் கீர்த்தனைகள்

ஆசிரியர் :

செ. நாகேந்திரன்


மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4342926

தொலைநகல் : 044-4346082

மின் அஞ்சல் : e-mail :

Manimekalai @ eth.net

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ *இலண்டன் ஹூசியம் சிவன்கோவில் கீர்த்தனைகள்* |
| ஆசிரியர் | ➢ செ. நாகேந்திரன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.2 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 12 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 52 |
| நூலின் விலை | ➢ **ரூ. 11.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. *ஆர். மோகன்* |
| லேசர் வடிவமைப்பு | ➢ *கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர்,* சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ *ஸ்கிரிப்ட் ஆப்செட்,* சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |

## ஆசிரியர் உரை....



இலண்டன் சிவன்கோயில் அறங்காவலர் மதிப்புக்குரிய D.R.S. நவரத்தினம் அவர்கள் சிவன் கோவிலுக்காக இரண்டு பாடல்கள் இயற்றித்தருமாறு கேட்க திருவருள் துணையால் சிவன் கோவிலுக்கு பாடல்கள் 17 உடன் பிள்ளையாருக்கு ஒன்றும் முருகனுக்கு ஒன்றும் சத்திக்கு ஒன்றும் பாபாவுக்கு ஒன்றுமாக மொத்தம் 21 பாடல்களைக் கொண்ட சிறிய நூலை நண்பர்களின் தூண்டுதலால் வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. மேலும் என்னிடம் பல கவிதைகளும் பாடல்களும் கைவசம் உள்ளன. இவற்றையும் நூல் வடிவமாக்க எண்ணியுள்ளேன். தயவு செய்து இச்சிறிய நூலை வாசிக்கும் தமிழ் உள்ளங்கள் குறை நிறைகளையும் ஆலோசனைகளையும் என்னுடன் பகிர்ந்து கொண்டால் மிகவும் உதவியாக இருக்கும்.

முன்னை நாள் ஆல் இந்தியா வானொலி அறிவிப்பாளரும் இலண்டன் பி.பி.சி. அறிவிப்பாளருமான கவிஞர். S. சங்கரமூர்த்தி அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை தந்ததும் மணிமேகலைப் பிரசுரம் இதனைப் பிரசுரிக்க முன்வந்ததும் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

நன்றி!


வணக்கம்.

Poet. S. NAGENDRAN B.A.,
7, GREENHILL GROVE,
MANOR PARK,
LONDON E12 6BD
TEL/FAX : 0208 5532190

# அணிந்துரை

கவிஞர் நாகேந்திரன் கவிமழை பொழிவதில் ஒரு கானமேகம்! சமூக வாழ்வியல் சிந்தனைகளையும் பக்திப் பாசுரங்களில் இணைத்துப் பாடுவது அவருக்குக் கைவந்த கலை. சந்தத்தமிழில் சரமாரியாக அவர் பொழிந்த கவிதைகள் பலவற்றை அவ்வப்போது படித்துச் சுவைத்திருக்கிறேன். காலத்தின் சோதனையால் இன்று பல்வேறு நாடுகளிலும் குடிபெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் வாழ்வில் ஓர் புதிய வெளிச்சத்தை விடிவுகாலத்தைக் காண அவர் உள்ளத்தில் ஓயாது அலைவீசிக் கொண்டிருக்கும் பிரார்த்தனையின் ஒலியை அவரது கவிதைகள் - கீர்த்தனைகள் பலவற்றிலும் ஊடுசரடாகக் காணலாம். காலத்தின் பிரதிபலிப்பாக இதனைக் கருதவேண்டும். மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திப்பதும் பக்தியின் குறிக்கோள்களில் ஒன்றல்லவா? அந்தக் குறிக்கோள் கவிஞர் நாகேந்திரன் கவிதையில் நன்கு தொனிசெய்கிறது. அவர் முயற்சி வெல்ல இறையருளை வேண்டுகின்றேன்.

மிக்க அன்புடன்
***சங்கரமூர்த்தி***



# இலண்டன் லூசியம் சிவன்கோவில் கீர்த்தனைகள்

## *விநாயகர் வணக்கம்*

முக்கண்ணன் முதன் மகனே மூதாட்டியின் குருவே
துக்கத்தையகற்ற வந்த தும்பிக்கைத் தூமணியே
திக்கெட்டும் பால் பருகித் திகைப்பூட்டி நாத்திகர்க்கு
வெட்கத்தை யீந்த வாரணனே வணக்கம்

## *தமிழ்த்தாய் வணக்கம்*

அன்னைத் தமிழே அருந்தமிழர் பொக்கிசமே
முன்னைக்கே தோன்றி மேதினியில் திகழ்ந்துவரும்
சென்னைக் களஞ்சியமே தென்மதுரைத் தேனமுதே
உன்னைப் பணிந்தே ஏத்துவோம் யாமென்றும்



# 1. ஸ்ரீசெல்வ விநாயகா

அல்லலைத் தீர்க்கும் ஆனைமுகத்தழகா
ஆனந்தம் தரவந்த செல்வ விநாயகா
ஸ்ரீசெல்வ விநாயகா
.... அல்லலைத் தீர்க்கும்

அன்னை தந்தையாம் பார்வதி சிவனோடு
ஆங்கில நாட்டில் அருள்தர வந்தவா
முன்னை வினைதீர்க்கும் மூஷிக வாகனா
முக்கண்ணர் மூத்தவா முத்திப்பிரதாபா
.... அல்லலைத் தீர்க்கும்

உம்பரும் துதிக்க உலகாளும் - எங்கள்
நம்பிக்கை ஒளியே நாத உருவே
நம்பிக்குத் தமிழ் சொன்ன மணியே - இங்கு
தும்பிக்கையுடன் வந்த தேனமுதே
.... அல்லலைத் தீர்க்கும்

கஜமுக அசுரனைப் பணியவைத்தாய் - அன்று
காலத்தை மாற்றிப் புகழும் பெற்றாய் - உன்னை
நிஜமுடன் துதிக்கும் தொண்டர்களை என்றும்
நலமுடன் காத்து அருள்புரிவாய்
.... அல்லலைத் தீர்க்கும்




# 2. தாண்டவமாடி

தாண்டவமாடித் தரிசனம் கொடுப்பது
சிதம்பரம் என்னும் ஆலயத்தில் - சிவன்
ஆண்டவராக அருள்தர வந்தது
லண்டனிலுள்ள லூசியத்தில்
... தாண்டவமாடி

அண்டச்சராசரம் அசையவைக்கும் உருத்திர மூர்த்தியவன்
அண்ணாமலையான் என்ற நாமத்தில்
அருள்மழை பொழிந்திடவே
உண்ணாமுலை அம்பிகையுடனே வந்து பதிகொண்ட
எண்ணா வகையினன் ஏகாந்த நாயகன் என்றும்
... தாண்டவமாடி

நஞ்சினையுண்டு தேவரைக்காத்தது திருக்கைலாயத்திலே
பஞ்சலோகத்தில் காட்சிக்கொடுப்பது பார்புகழ்
லண்டனிலே - அன்று
அஞ்சிய தொண்டரை அன்புடன் காத்தது
மதுரைமா நகரினிலே
தஞ்சமெனவந்த தமிழரைக்காப்பது
திருப்பெரும் சீமையிலே
... தாண்டவமாடி



# 3. கலைக்கோயில்

கண்டவர் மயங்கும் கலைக்கோயில் ....அது
லண்டனிலுள்ள சிவன்கோயில்
....... கண்டவர்

உண்ணாமுலையாள் அம்பிகையுடனே
அண்ணாமலையான் வதியும் இடம்
........ கண்டவர்

புகழ்வது எல்லாம் அவன்மாட்சி .... இங்கு
நிகழ்வன எல்லாம் அவன் ஆட்சி
இருளைப்போக்கி அடியார்க்கு என்றும்
அருளைப்பொழியும் புனித இடம்
....... கண்டவர்

ஆலகாலவிடமுண்டு தேவரைக்காத்த ஆதிசிவன்
காலம் முழுதும் நமைக்காக்க கருணைவடிவாய் வந்தஇடம்
சூலம்தாங்கி திரிபுரமெரித்த சோமசுந்தர மூர்த்தியவன்
சீலத்துடனே தமிழனம்வாழத் திருவருள் கொடுக்கும்
தூய இடம்
........கண்டவர்



# 4. நடராஜனே

நடராஜனே லண்டன் பெரும் ராஜனே
விடமுண்டு துயர்தீர்த்த வேதாந்தனே
........நடராஜனே

மலைமாதை மணங்கொண்ட மணவாளனே
கலையே தன்னிலையான வடிவாளனே
.......நடராஜனே

முப்புரம் எரித்த முக்கண்ணனே
மூவேந்தர் இசைகேட்ட மாவண்ணனே
தப்பேதுஞ்செய்யாது தவிக்கின்ற இனத்துக்கு
தரணியில் விடிவொன்றைக் காட்டுமையா
.........நடராஜனே

நாதமே உருவான ஏகாந்தனே ...உன்
பாதாரவிந்தத்தைப் பணிந்தோமையா
சோதனையும் வேதனையும் போதும் ஐயா ....எங்கள்
சுதந்திர தாகத்தை தீரும் ஐயா
.........நடராஜனே



# 5. சாயிராம்

சத்திய சுந்தர நாயகா
சரணம் சரணம் சாயிராம்
......சத்திய சுந்தர

நித்திய ரூபா நிர்மல நாதா
நளின கேசவ ஈஸ்வரா
......சத்திய சுந்தர

உத்தமரூபா உலகின் நேசா
உள்ளத்திலுறையும் ஓம் குருநாதா
......சத்திய சுந்தர

பத்திபுரியீசா பரமா னந்தா
பக்தருக்கருளும் பாண்டுரங்கா
வித்தக விமலா வரகுண கருணா
வேதனை தீர்க்கும் விபூதி நாதா
......சத்திய சுந்தர



# 6. சிவநாதனை

லண்டனில் பதிகொண்ட சிவநாதனை
தினந்தினம் நீயே நினைந்துகொள் மனமே
......... லண்டனில்

தனந்தருவான் நல்ல குணந்தருவான்
கனந்தந்து உன்னைக் காத்தருள்வான்
......... லண்டனில்

பத்தியுடன் அவன் பதிகொண்ட இடத்தில்
பக்குவமாகவே பால்பழம் சாத்தி - உன்
சித்தமெல்லாம் அவனிடம் செலுத்தி
தித்திக்கத் தேவார திருமுறைப் பாடி
......... லண்டனில்

செல்லுமிடமெல்லாம் சிறப்புகள் ஓங்க
செய்யும் தொழில்களில் செல்வங்கள் பொங்க
இல்லச் செழிப்புடன் ஈடற்ற புகழுடன்
வல்லமையுள்ள வாழ்வினைத் தருவான்
......... லண்டனில்

சுற்றிய பகைவரைச் சிதறவைத் தோட்டி
வெற்றியும் வீரமும் வளங்கொண்ட நாடும்
சுற்றமுடன் வாழும் சுதந்திர ஆட்சியும்
கற்றவர் போற்றுங் கலைகளும் தருவான்
....... லண்டனில்

# 7. காத்தருள்வாயே

தேம்சு நதியோரத்திலே திருவளரும் நாட்டினிலே
நாம்காண வந்தவனே லூசிய நாதா

- தேம்சுநதி ஓரத்திலே

பாதியுமையானவனே புலம்பெயர்ந்தோர் காவலனே
பன்னிருகை வேலவனைப் பெற்றவனே
சோதிவடிவானவனே சங்கத்தமிழ் காத்தவனே
சீமையிலே பதிகொண்ட சங்கரனே

- தேம்சுநதி ஓரத்திலே

வேண்டியதை அருள்பவனே வெற்றிக்கு வித்தகனே
வாதியாய் வழக்குரைத்த சிவபெருமானே
ஆண்டவர்க்கும் ஆண்டவனே லண்டனிலே நாயகனே
ஆதியந்தமில்லாத நமச்சிவாயனே

- தேம்சுநதி ஓரத்திலே

அரவம் அணிந்தவனே பரதத்தைத் தந்தவனே
ஆலகால விடமுண்ட பரமநாதனே

வரங்கள் தருபவனே வரலாற்றைத் தொடர்பவனே
வருங்காலம் எமக்களிப்பாய் வாமதேவனே - நல்ல
வருங்காலம் எமக்களிப்பாய் வாமதேவனே
அசுரகுல அராசகத்தை வேரோடு அழித்தவனே
தேசமெங்கும் தமிழனத்தைக் காத்தருள்வாயே
தேசமெங்கும் தமிழனத்தைக் காத்தருள்வாயே

- தேம்சுநதி ஓரத்திலே

# 8. இலண்டன் திரு நீலகண்டன்

இலண்டன் திரு நீலகண்டன்
திருவடி துதிக்க வாரீர்
.... இலண்டன் திரு

பண்டம் நிதி கொண்ட நாட்டில்
பண்புநெறி புகட்ட வந்த
.... இலண்டன் திரு

கொண்டையில் கங்கை பொங்க
கண்டத்தில் அரவந் தொங்க
முடியிலே திங்கள் தங்க
முடிவிலா நடனம் ஆடும்
.... இலண்டன் திரு

சங்கத்தமிழ் எங்குந் தருவான்
எங்குந் நிறை செல்வம் தருவான்
தங்குந் நாடெங்குந் தேடி
பங்கம் அற வாழ்வுந் தருவான்
.... இலண்டன் திரு

தேங்கி வரும் பகைமை நீங்க
தாங்கி வரும் தலைமை ஓங்க
வேங்கைக் கொடி ஏறச் செய்து
வீரம் புகழ் வெற்றி தருவான்

.... இலண்டன் திரு





# 9. சிதம்பரநாதா

சீமையில் கோவில் கொண்ட சிதம்பரநாதா
சித்தந் தெளிய வைத்துச் சிவ அருள் தா தா
.... சீமையில் கோவில்

ஊமையைப் பேசவைத்த உமையவள் பாகா
உள்ளத்திலுயர்ந்த எண்ணத்தைத் தா தா
.... சீமையில் கோவில்

மண்ணையும் விண்ணையும் உயிரையும் படைத்து
பண்ணிசை ராகமும் பரதமும் தந்து
அண்டங்கள் அனைத்தும் அசைந்திடும் வண்ணம்
தாண்டவம் ஆடும் அம்பலக் கூத்தா
.... சீமையில் கோவில்

உன்தனை உயர்வாய் உலகினில் கண்டு
உன்தனை நம்பி விரதங்கள் பூண்டு
பற்றுடன் திருவடி போற்றிடு மெங்கள்
சுற்றத்தின் வாழ்வில் வெற்றியைத் தா தா
..... சீமையில் கோவில்

கொண்ட பெரும்பகை அசுரரை வென்று
தொண்டரைத் தோழனாய் ஏற்றிட்ட நேசா - உன்
திருப் பெருந்தலங்களை உருக்குலைப்போரை
கருக்க நெருப்பாய் விரைந்திடு ஈசா
.... சீமையில் கோவில்



# 10. லோக நாதா

லோக நாதா லிங்கேஸ்வரா
லண்டன் நேசா லூசிய வாசா
..... லோக நாதா

தூங்காது அடியாரைக் காக்கின்ற ஈசா
கெங்காதரானந்த திரு நீல கண்டா - எங்கள்
..... லோக நாதா

பலங்கொண்டு உலகைப் பணிய வைத்த நாட்டில்
தலங்கொண்ட தெட்சணாமூர்த்தியே உன்னை
வலம் வந்து பணிகின்றோம் போற்றுகின்றோம்
நலங்காத்து என்றும் அருள் புரிவாய் - எங்கள்
..... லோக நாதா

உலங்கு ஊர்தியில் வலம் வந்து ஆண்ட
இலங்கேஸ் வரனின் இசையில் லயித்தவா
கலங்கி வாழுமுன் அடியார்க்கு அங்கு
பலங்கொடு நிலங்கொடு விலங்குடைத்து - எங்கள்
..... லோக நாதா

# 11. நாம் காண வந்த ஈஸ்வரா

மேம்பாட்டிலுயர்ந்த லண்டன்மா நகரில்
நாம் காண வந்த நாயகா
தோம் தோம் என ஆடும் ஈஸ்வரா - எங்கும்
தோம் தோம் என ஆடும் ஈஸ்வரா
.... மேம்பாட்டிலுயர்ந்த

ஆதவன் என்றும் மங்காத அளவு
அகிலத்தை ஆண்ட நாட்டிலே - மக்கள்
பேதங்களற்று உழைக்கும் பணத்தை
பகிர்ந்து உவக்கின்ற நாட்டிலே
.... மேம்பாட்டிலுயர்ந்த

தித்திக்கும் பழங்கள் தரமான பானங்கள்
நித்தம் மலிந்துள்ள நாட்டிலே
சுத்தம் சுவையான உணவு வகையோடு
முத்தமிழும் வாழும் நாட்டிலே
.... மேம்பாட்டிலுயர்ந்த

உன்னையே தெய்வமாய் வாழ்வில் மதித்து
அகிலத்தில் வாழும் அடியார்க்கு
முன்னை வினைகளை வேரறுத்தருளி
மேன்மையும் அமைதியும் ஈந்திடுவாய்
.... மேம்பாட்டிலுயர்ந்த

பூதகணங்கள் புடைசூழ வேதமந்திரம் வீறுதர
நாத ஒலியோடும் கீதமழையோடும்
சீதப்புனல் பாய பாதந்தனைத் தூக்கித்
தோம் தோம் என ஆடும் ஈஸ்வரா - எங்கும்
தோம் தோம் என ஆடும் ஈஸ்வரா.



உ



# 12. ஓம் நமச் சிவாய ஓம்

ஓம் நமச் சிவாய ஓம்
சிவாய சிவாய ஓம்
.... ஓம் நமச் சிவாய

அபாயமறுத்து அல்லல் தீர்க்க
உபாய மந்திரம் இது
.... ஓம் நமச் சிவாய

உருகா மனத்தை உருக்கும்
திருவாசகத்தில் தேனிது
பருகப் பருக இனிக்கும்
தேவாரத்தில் மருந்திது
.... ஓம் நமச் சிவாய

பூசைக்குரிய மந்திரம்
ஆசை அறுக்கும் யந்திரம் - தமிழ்ப்
பாசைக்குரிய நல்வரம்
பேசப் பேசப் பயம் போகும்
.... ஓம் நமச் சிவாய

புத்திக்குள்ளே சென்று
சுத்திகரிக்கச் சிறந்தது
பத்திக்குரிய வித்திது
முத்தி தரவும் முயல்வது
.... ஓம் நமச் சிவாய

நீதி வழியே சென்று
மேதினியைத் தினங் காப்பது
ஓதி ஓதி வர வர
போதிய அமைதி தருவது
.... ஓம் நமச் சிவாய

தேடற்கரிய திரவியம்
பாடப் பாடப் பலன்தரும்
ஆடற்கலைக்கு அபிநயம் - இது
ஈடேற்றத்தின் ரகசியம்
.... ஓம் நமச் சிவாய

திருவும் சீரும் தந்து
பருவத் தழகைக் காப்பது
குருவாய் எவர்க்கும் நின்று
வருங்காலத்தை அமைப்பது
.... ஓம் நமச் சிவாய

செல்லும் பாதை சீராக்கி
இல்லத்தாரைக் காப்பது
வல்லமை தர வல்லது
வெல்லும் வாய்ப்பைத் தருவது
.... ஓம் நமச் சிவாய

# 13. வேதநாயகா

வேதநாயகா வெற்றியின் தலைவா
நாத நாம நமச்சிவாயா

.... வேத நாயகா

அமரர்க்கு ஆபத்தில் விடமுண்டாய் - சீமையில்
குமரர்க்குப் பின் வந்து கோவில் கொண்டாய்
சமருக்குப் பதில் சொல்லும் சங்கரா - எங்கள்
தமருக்குத் தண்ணொளி காட்டு நீ

.... வேத நாயகா

காலங்கள் ஆறும் ஆனவா - கட்டிக்
காற்றையும் நீரையும் காப்பவா
கோலத்தில் பல்வேறு ரூபகா - வெற்றி
கும்பிடும் அடியார்க்கு ஈட்டு நீ

.... வேதநாயகா

ஏழு சுரங்களும் ஆனவா ஈடற்ற ஏக நாயகா
சூழும் பகைதனை வென்று சுந்தரத் தமிழைக் க த்தவா
நாளும் உனைப் பணிந்தேத்துகிறோம் உரிமையுடன்
வாழ இடமொன்றைக் காட்டு நீ

.... வேத நாயகா

பைந்தமிழ்த் தொண்டரைக் காத்திடச் சென்று
பிரம்படி பெற்ற பரமனே இரத்தம்
சிந்தியே இனத்தைக் காத்திடுவோர்க்கு
வெற்றித் திலகம் சூட்டுநீ

.... வேதநாயகா

# 14. இலண்டன் நகருக்கு வந்ததென்ன

பிட்டுக்கு மண்சுமந்து கட்டுடன் விறகும் விற்று
பாட்டுடைப் புலவனாகித் தருமிக்குக் கவியுரைத்தாய்
பாட்டிசை வித்தகனாய்ப் பாணபத்திரனைக் காத்து
நாட்டுக்கு நாடுசென்று பத்தரைத் தாங்கிவருஞ் சிவனே

லண்டன் நகருக்கு வந்த தென்ன நீ
லூசியத்தில் பதி கொண்ட தென்ன
.... லண்டன் நகருக்கு

மண்டப மெங்கும் தமிழ் மணக்க
மங்கள பூசைகள் அலங்கரிக்க
மண்டல கிரகங்கள் பூசை கொள்ள
மாதரும் வந்து சிந்திசைக்கும்
.... லண்டன் நகருக்கு

வீணைக் கொடிவேந்தன் வழிவந்த
வீணை இசைகளைக் கேட்கவா - இல்லை
பரத நடனம் பார்க்கவா பத்திக் கீதங்கள் கேட்கவா
விரதமிருக்கும் அடியார்க்கு விரும்பும் வரங்கள் ஈயவா
.... லண்டன் நகருக்கு

வாரமும் கச்சேரி ரசிக்கவா இல்லை
அரங்கேற்றம் மாதமும் காணவா - இந்த
ஈரமனமுள்ள நாட்டிலே நீ
இடும்பை போக்க என்ன உண்டு
.... லண்டன் நகருக்கு

நூதன சிந்தை வளர்க்கவா நல்ல பணிகளைப் பேணவா
நாதமணிகளைக் கேட்கவா நவரத்தினங்களைப் பார்க்கவா
பாரத நாட்டில் அள்ளி வந்த உன்
பரிவார பொக்கிசம் தேடவா
..... லண்டன் நகருக்கு

# 15. ஆனந்த நடராஜனே

ஆனந்த நட ராஜனே
வானவர்காணத் தில்லையிலாடும்
.... ஆனந்த நடராஜனே

உமையுடன் ஆடி உளமார மகிழ்ந்து
நமையாளும் நல்ல நாத உருவான
.... ஆனந்த நடராஜனே

சிந்தையில் தினமும் துதித்து
புந்தியுடன் பிணி நீக்கி - நாம்
பந்த பாசமுடன் வாழ
தொந்திவயிறனைத் தந்த
.... ஆனந்த நடராஜனே

கனல் வீசுங் கண்ணாலே
கன்னித் தமிழ் காக்க
கந்தப் பெருமானைத் தந்து - தேம்
புனல் பாயும் திருநாட்டில்
பதி கொண்டு அருள் வீசும்
.... ஆனந்த நடராஜனே

தீயன மாள நல்லன வாழ
தரணியில் உன்னருள் சூழ
ஆய கலையுடன் உன்னவர் ஆள
ஆதிக்கம் தா எங்கள்
.... ஆனந்த நடராஜனே



# 16. கண்டேன் கண்டேன்

கண்டேன் கண்டேன் ஒரு கோலம்
லண்டன் சிவபெருமானின் திருக்கோலம்
.... கண்டேன் கண்டேன்

அழகிய முத்து மணிமண்டபம் அதற்குள்
அணியணியான கொலு மண்டபம்
இளகிய மனங்கொண்ட மக்கள் முன்னே
எழுந்தருளி எழிலோடு நிற்க
.... கண்டேன் கண்டேன்

நவரத்தினங்கள் சேர்த்தமைத்த
நவநவமான அணிகலன் பூண்டு
நவக்கிரகங்களை அருகிலமர்த்தி
சிவசிவ என்று ஒளியெங்கும் வீச
.... கண்டேன் கண்டேன்

உம்பரும் துதிக்க எமையாண்டு வரும்
நம்பிக்கை ஒளிவீசும் நல்லருள் நாதனை
அம்பிகை ஆனைமுகன் அழகிய ஆறுமுகன்
சம்பந்த பரிவார சாந்தசொரூபனாய்
.... கண்டேன் கண்டேன்

மாலை சூடிய மங்கள மூர்த்தியாய்
காலைத் தூக்கி ஆடுங் கலைஞனாய்
ஆலம் உண்ட நீல கண்டனாய்
சூலந் தாங்கிய சுதந்திர தாகனாய்
.... கண்டேன் கண்டேன்

# 17. கோலாகலமாக

கோலாகலமாக லூசியம் சிவனுக்கு
பாலாபிசேகம் பண்ணுங்கள்
.... கோலாகலமாக

சீராக அனைத்தையும் செம்மைப்படுத்தி
தீராத அனைத்தையும் தீர்த்தருள்வான்
தீராத அனைத்தையும் தீர்த்தருள்வான்
.... கோலாகலமாக

ஆலாலசுந்தரன் அன்புக்கு இரங்கி
தோழமை கொண்ட தயாளனாம்
வேலாயுதனை வீறுடன் படைத்து
சூரனை வதைப்பித்த வீரனாம்
.... கோலாகலமாக

காலால் மிதித்த கண்ணப்பனுக்கு
கருணையைப் பொழிந்த வள்ளலாம்
சூலாயுதத்துடன் திரிபுரம் எரித்து
அசுரரை அழித்த ஈசனாம்
.... கோலாகலமாக

பதினாறு வயது மார்க்கண்டனுக்காய்
கூற்றனை உதைத்த நாதனாம் - கங்கை
நதியாக இங்கு நிதியோடும் நாட்டில்
பதி கொண்ட சிவ பாதனாம்
.... கோலாகலமாக

நூலாக நின்று நீதியைக் காக்கும்
மேலான தெய்வம் வேறு யார் - இங்கு
மேலான தெய்வம் வேறு யார்
தாலாட்டுப் பாடி ஆலாத்தி எடுத்து
.... கோலாகலமாக

# 18. இனிக்கும் தேனே

நினைத்தால் இனிக்கும் தேனே
வினை தீர்க்கும் லூசியத் தானே - பாவ
வினை தீர்க்கும் லூசியத் தானே
.... நினைத்தால்

உன்திருக் கோலந்தானே
தினந் தினம் நினைந்திருப் பேனே
.... நினைத்தால்

மழைதரும் வானே மங்கள நாதனே
ஈசனே உன்னை என்றென்றும் நானே
.... நினைந்தால்

இசையின் வடிவாய்
அசையும் காற்றாய்
ஆடுங் கலையாய்
தேடுங் கருத்தாய்
.... நினைத்தால்

அருவாய் இலதாய்
உருவாய் உளதாய்
திருவாய் மலருங் குருவாய்
கருவாய் உதிக்கும் கனலாய்
.... நினைத்தால்

மூலப் பொருளாய் முக்கண்ணனாய்
நீல கண்டனாய் நித்திய நிழலாய்
கால மழையாய் கண்ணின் மணி'பாய்
ஓல ஒலிகளைத் தணிக்க ஒருவனாய்
.... நினைத்தால்





# 19. வெண்மதி சூடிய

வெண்மதி சூடிய வேத நாயகா
பண்ணிசைப் பிரியா பரமேஸ்வரா
- வெண்மதிசூடிய

விண்ணவரும் மயங்க விஞ்ஞானம் ஊற்றெடுக்கும்
கண்கவர் லண்டனில் கோவில் கொண்ட
- எங்கள்வெண்மதி சூடிய

எண்ணித்துணிய வைத்து ஏராளம் தொழில் பெருக்கி
மண்ணின் மாண்புகள் மாறாது வழிநடத்தி
வண்ணத்தமிழினத்தை வளமுடன் வாழ்விக்கும்
அண்ணாமலையானே அன்பின் வடிவமே
- எங்கள் வெண்மதிசூடிய

பாரியும் பரமிருந்து பார்த்து வியப்படைய
மாரிமழையாக்கி வர்த்தகரைச் சீமையிலே
வாரியிறைக்க வைத்து முத்தமிழ் வளர்க்கும் அர்த்த
நாரீஸ்வரனே ஆனந்த ஒளிவீசு அகில மெங்கும்
- எங்கள் வெண்மதிசூடிய



# 20. வருக வருகவே

வருக வருக வருகவே
முருகா நீ தமிழ் நெஞ்சில் - வருக வருகவே

மால் முருகா நீ எந்நாளும்
தமிழ் நெஞ்சில் குடிகொள்ள - வருக வருகவே

பருகத் தமிழோடு பாரெங்கும் புகழ்தந்து
பெருகப் பெருக வளமீந்து - துயர்
அருக அருக அவை யணுகா வண்ணம்
காக்கும் குமரா - வருக வருகவே

உருவமாறாகி உணர்வில் ஒன்றாகி
புருவ எழிலோடும் பருவக் கனலோடும்
இருவகை மணஞ்செய்த வேலவா
மிருக மனமுள்ள மாந்தரை மாற்றி
தருக தருக என அமைதி வேண்டி யுன்னில்
உருகு மடியாரின் உள்ளங் களிப்பாக்க
வருக வருகவே! வருக வருகவே!

## ஈஸ்வரியே அம்மா!

உலகின் நாதமுன் சலங்கையொலி
பலமும் பலனும் உன்தயவேயம்மா
உலகின் நாதமுன்

நலமின்றி நீதியின்றிக் கலங்குகின்றோம்
புலம் பெயர்ந்து பாரெங்கும் அலைகின்றோம்
விடையேதும் இதுவரையில்லையம்மா - உன்
கடைக்கண்ணால் ஒருதரம் பாருமம்மா
உலகின் நாதமுன்

கல்லுக்குள் ஈரம் நீயே
கருணையின் வடிவம் நீயே
சொல்லுக்குள் அர்த்தம் நீயே
சமாதானச் சமிக்ஞை நீயே
வில்லுக்குள் நாணும் நீயே
வீரத்தின் வேட்கை நீயே
வெல்லும் வாய்ப்பளித்து
வேதனைகள் தீர்க்கும் தாயே
உலகின் நாதமுன்

காலத்தின் கோலமெல்லாம் - உன்
பாதத்தின் அசைவுகளே

சூலத்தின் அசைவு எல்லாம்
சுதந்திர தாகங்களே
கண்களின் அபிநயங்கள்
கலைகளின் வடிவங்களே
கைகளின் அபிநயங்கள்
ஓயாத கடல் அலையே
எண்ணியதை முடித்துவைக்கும்
ஈஸ்வரியே எம்மை
ஏறெடுத்து ஒருதரம் பாருமம்மா.



# விற்பனையாகும் இதர நூல்கள்!

## பக்திப் பாடல் - Devotional Song

| | |
|---|---|
| அன்றாடம் இந்துக் கடவுள்களை வழிபட உதவும் பாடல்கள் | 20.00 |
| நினைத்தது நிறைவேற உதவும் இறையருட் பாடல்கள் ------ | 50.00 |
| துன்பம் தீர்க்கும் துதிப் பாடல்கள் ---------------------- | 22.00 |
| பக்தி பஜனைப் பாடல்கள் ---------------------------- | 33.00 |
| கல்ப பூஜை அர்ச்சனைகள் ---------------------------- | 20.00 |
| அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் மாலை ------------- | 28.00 |
| ஆதிசங்கரர் அருளிய சுப்ரமண்ய புஜங்கம் --------------- | 6.00 |
| தாயுமானவர் பாடல்கள் ------------------------------ | 15.00 |
| இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா ------------------ | 31.00 |
| திருமுறை திவ்யப் பிரபந்தத் திரட்டு--------------------- | 9.50 |
| ஸ்தோத்திரக் களஞ்சியம் ----------------------------- | 14.50 |
| துளசி மாட பூஜையும் திருவிளக்கு வழிபாடும் ------------ | 36.00 |
| ஸ்தோத்திர மாலை ---------------------------------- | 32.00 |
| திருப்பாவை, திருவெம்பாவை-மூலமும் தெளிவுரையும் ----- | 10.00 |
| அபிராமி அந்தாதி - மூலமும் உரையும் ------------------ | 14.00 |
| சௌந்தர்ய லஹரி கனகதாரா ஸ்தோத்திரம் மூலமும் தெளிவுரையும் -------------------- | 17.00 |
| திருவாசகம் --------------------------------------- | 33.00 |
| ஐயப்பன் பாமாலை ----------------------------------- | 27.00 |
| சுவாமி ஐயப்பனைப் பற்றிய அருமையான பாடல்கள் --------- | 32.00 |
| காரிய சித்திதரும் லலிதா சஹஸ்ரநாமம் ------------------ | 27.00 |
| மேல்மருவத்தூர் அம்மாவின் திருப்புகழ் ------------------ | 6.00 |
| திருப்பதியார் திருப்புகழ் ------------------------------ | 42.00 |
| லக்ஷ்மி அஷ்டோத்திர நாமாவளியும் இதர ஸ்தோத்திரங்களும் | 26.00 |
| மதுரை காஞ்சி ------------------------------------- | 29.00 |

## முருகனைப்பற்றிய நூல்கள் - Books on Lord Muruga

| | |
|---|---|
| கந்தபுராணம் --------------------------------------- | 99.00 |
| திருமுருகன் திருத்தலங்கள் ---------------------------- | 30.00 |
| மன சரவணம் - கண்ணப்ப மனோகரன் ------------------ | 53.00 |

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803